இலஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

களம் -20 வெற்றி -9

# நேர்மை நெறி

செப்டம்பர் 2021

(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்)

(Reg.No.349/2001)

அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை

**(NERMAI NERI)**

Rs.10

## இலாபம் ஈட்டும் பொதுத்துறைகளை ஏலம் விடுவது இலஞ்சத்துக்காகவா? நிர்வாகத் திறமையின்மையா?



**ஊழல் = சாபம்**

PUBLISHED BY

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, "நம்பகம்",
கொன்னூர் நெடுஞ்சாலை, அன்பகம், சென்னை-600023
Cell:8778312823
e-mail:acmchennai2001@yahoo.com
website:anticorruptionchennai.com

# தலைவர் மடல்

**அன்பார்ந்த உறுப்பினர் சகோதர சகோதரிகளே** !
வணக்கம். இம்மடல் மூலம் மீண்டும் உங்களை தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**எச்சரிக்கை:**

அன்பார்ந்த உறுப்பினர்களே, நமது இயக்கம் ஏற்கெனவே பல நிர்வாகிகளை/ உறுப்பினர்களை கோவிட்-19 வைரசுக்கு பலி கொடுத்து விட்டது. கொரோனாவால் இனி ஒரு பலி கூட இருக்கக்கூடாது. மூன்றாவது அலை இன்று வரும்! நாளை வரும்!! என்று மருத்துவ வல்லுனர்கள் அறிக்கைவிட்டு வந்த நிலையில், இப்போது வந்துவிட்டதாகவே எண்ணுகிறார்கள். எனவே, ஒவ்வொரு உறுப்பினரும், கோவிட்-19லிருந்து தம்மையும் சமூகத்தையும் பாதுகாத்துக் கொள்ள, அரசு தடுப்பு ஊசியை உரிய இடைவெளியுடன், இது வரை போடாதவர்கள், உடனடியாக போட்டுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். தடுப்பூசி போட்டுக் கொண்டாலும், தொடர்ந்து அரசு அறிவித்துள்ள பாதுகாப்பு நெறிமுறைகளைக் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டுகிறோம்.

**75வது சுதந்திர தினக்கொண்டாட்டம் ஒரு கேள்விக்குறி**! :

பெற்றோரை நடுத்தெருவில் விட்டுவிட்டு தந்தையர் தினத்தையும், தாயார் தினத்தையும் கொண்டாடும் இன்றைய தலைமுறை பிள்ளைகளைப் போல், சுதந்திரத்தின் மகத்துவம் அறியாமல், அதை தவறாகப் பயன்படுத்தி, நாடின் வளங்களை அழித்துவிட்டு, மக்களைக் கொல்லும் நஞ்சு மண்டலமாக இந்நாட்டை மாற்றிவிட்டு, குழி தோண்டி புதைத்துவிட்டு, நமது 75வது சுதந்திர தினத்தையும் விழா எடுத்து கோலாலகாலமாக கொண்டாடி முடித்து விட்டோம். ஆனால், சுதந்திரத்திற்குப் பிறகு, நாம் வளர்ச்சி பெற்றுள்ளோமா என்று ஆராய்ந்து, ஆம்! வளர்ந்துள்ளோம்! என்று அறிந்தால் தானே, விழா எடுப்பதில் ஒரு அர்த்தம் இருக்கும். மகிழ்ச்சியான தருணத்தில் விழா எடுப்பதும், துயர நிழ்வுக்காக துக்கம் அனுஷப்பதும் தானே, மனித இயல்பு. ஆனால் உண்மையில் சுதந்திரம் பெற்று, நம் கையில் ஆட்சி வந்த பின், நாம் வீழ்ச்சியடைந்திருப்பின், அதை சரி செய்ய முயலாமல், வீழ்ச்சியை கொண்டாடி வரும் வீணர்களா நாம்! என்று நினைக்கின், “நிலை கெட்ட இந்த மாந்தரை நினைத்தால் நெஞ்சு பொறுக்குதில்லையே” என்ற முண்டாசுக்கவி, மகாகவி பாரதியின் வார்த்தைகள் தான் நினைவுக்கு வந்து நெஞ்சை பிளக்கிறது. எனவே, ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று நாம் கடந்த ஆண்டில் ஒரு இம்மியளவேனும் உண்மையில் முன்னேறியிருப்பின், ஒவ்வொரு குடிமகனும் வான வேடிக்கை செய்து கொண்டாடலாம், ஆம்! கண்டிப்பாக கொண்டாட வேண்டும். எனெனில், விடுதலையும் சுதந்திர உணர்வும் இல்லாமல், வாழும் எந்த வசதியான வாழ்க்கையும் நரகமே. எனவே, நாம் இந்த சுதந்திர தினத்தை கொண்டாட வேண்டுமா? அல்லது கொண்டாடத்தக்க வகையில் அடுத்த சுதந்திர நாள் இருக்கும் வகையில் செயல்பட வேண்டுமா? என்பதைப் பார்ப்போம்.

**கடந்த சுதந்திர தினத்தை கொண்டாட வேண்டுமா? அல்லது சுதந்திரத்தின் இன்றைய நிலைமையை நினைத்து கூனிக்குறுக வேண்டுமா அல்லது அடுத்த ஆண்டு கொண்டாடும் வகையில் நம்மை சரி செய்து க்ள்ள வேண்டுமா? என ஆராய்வோம்:**

ஒரு நாடு வளர்ச்சியடைந்துள்ளது என்றால், வான்வெளியில் ராக்கெட் விடுவதோ, அல்லது அடுத்த நாட்டை படையெடுத்து வெல்லும் சக்தி கொண்டுள்ளதோ அல்லது, சொகுசு கார்களில் வசதிபடைத்தோர் பவனி வருவதோ அல்ல. என்றைக்கு, ஒரு நாட்டில் குடிமக்கள், ஒவ்வொருவருக்கும், சுவாசிக்க மாசற்ற காற்றும், குடிக்க சுத்தமான

தண்ணீரும், போதிய அளவுக்கு உண்ண சத்துள்ள சரிவிகித உணவும், குடும்பத்துடன் மன அமைதியுடன் வசிக்க, ஆரோக்கியமான சூழலில் அமைந்த குறைந்த பட்ச வசதியுடன் கூடிய ஒரு வீடும், உயிர், உடைமை மற்றும் பெண்ணின் கற்புக்கு பாதுகாப்புள்ளதோ அந்த நாடே நாடாகும். மற்றவையெல்லாம் நாடுகளல்ல, சுடுகாடுகளே!. என்பது எமது கருத்து. யாம் அலசி ஆராய்ந்ததில் மேற்சொல்லப்பட்ட ஒவ்வொரு வசதிகளும், ஆண்டு தோறும், ஏன் ஒவ்வொரு நாளும், வானளாவிய வேகத்தில் நம் நாட்டில் குறைந்து/அழிந்து கொண்டே வருகிறது, என்பதுவே, யாம் அறிந்ததும் உனர்ந்ததும். அதை நினைத்து அனுதினமும் யாம் வெட்கப்படுவதுவும் தான். எனவே, நாம் சுதந்திர தினம் மட்டுமின்றி, அனுதினமும், நமது இந்த அவல நிலையை குறித்து வெட்கித்தலை குனிய வேண்டுமேயன்றி, கொண்டாட எதுவும் இல்லை. மேற்குறிப்பட்ட அடிப்படைத் தேவைகளின் அடிப்படையில், சுதந்திரத்திற்குப் பின், நமது நாட்டின் வளர்ச்சியை ஆராய்வோம்.

**சுவாசிக்கும் காற்று**:

1947 ஆம் ஆண்டில், காற்று மாசு என்பது என்ன வென்றே யாருக்கும் தெரியாத அளவுக்கும், ஏன்! கற்பனையில்கூட, நினைத்துப் பார்க்க இயலாத அளவுக்கும் சுத்தமாக இருத்துள்ளது. ஏன், 1980 களிலேயே, மிகவும் சுத்தமான காற்றை சுவாசித்துள்ளோம். ஆனால், இந்தியா நாட்டில்,, பெரும்பாலான மக்கள் வசிக்கும் நகரங்கள் எல்லாம் காற்று மாசுபட்டு கொடிய நோய்களுக்காட்பட்டு மடிகிறார்கள் என்பது கண்கூடாக பார்க்கிறோம். உலக நகரங்களோடு, ஒப்பிடுகையில், இந்திய நகரங்கள் படு மோசமாக உள்ளன என்பது கண்கூடாகத் தெரியும் உண்மை. காரணம், தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் வாயு வடிவக் கழிவுகளும், பல்கிப் பெருத்துள்ள வாகனங்களும்தான். இவற்றுடன், லஞ்சம் பெற்றுக்கொண்டு ஆளும் வர்க்கம் செய்யும் அயோக்கியத்தனமுமே. தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூட மூன்று மாதங்களுக்கும் மேல் பெரும் போராட்டத்தை நடத்தி பல உயிர்களை பலி கொடுக்க வேண்டியிருந்தது என்ற கொடுமையை, நாம் அனைவரும் கண்கூடாக கண்டோம். ஆனால், இத்துணை உயிர்களை, பலிவாங்கிய காட்டுமிருகங்கள் இன்றுவரை தண்டிக்கப்படவில்லை. ஆனால், இது போன்றே, ஒரு ஜனநாயக நாடான, அமெரிக்காவில், ஒரு கருப்பரைக் காலால் மிதித்துக் கொன்ற ஒரு போலிஸ் அதிகாரிக்கு, ஆறே மாதத்தில் கடும் தண்டனை வழங்கப்பட்டுவிட்டது. ஆனால், 2018ல் தூத்துக்குடியில் நடந்த துப்பாக்கியால் அநியாயமாக சுட்டு கொல்லப்பட்டவர்களுக்கு இது நாள் வரை நீதி கிடைக்கப்பெறவில்லை. இது போன்று வெட்கித்தலை குனியும் நிலையில் சுதந்திரத்திற்குப் பிறகு நமது நாட்டினை வைத்திருக்கும் நாம், இப்போது கொண்டாடப்பட என்ன இருக்கிறது.?

**குடி நீர்**:

யாம் சிறு வயதில், 1975 வாக்கில்ஆற்று நீரை அப்படியே அள்ளிக் குடித்து தாகம் ஆற்றிக்கொண்டுள்ளோம். களங்களின்றி மாசு களங்கமற்று ஆற்று நீர் இருந்தது. ஆனால், இன்று, விஷமாகிவிட்டது. இதற்குக் காரணம், தொழிற்சாலைக் கழிவுகள் அப்படியே சுத்தம் செய்யப்படாமல் ஆற்றில் கலக்கப் படுகிறது. தொழிற்சாலைகளிடம் லஞ்சம் பெற்றுக்கொண்டு ஆளும் வர்க்கத்தால், அனுமதிக்கப்படுகிறது. ஆற்று நீரை இவ்வாறு அசுத்தம் செய்ய லஞ்சம்; பின்னர், ஆற்று நீரை சுத்தம் செய்வது போன்று டெண்டர் விட்டு அதிலும் லஞ்சம். இதுதான் கொடுமையென்றால், நகராட்சிகள் சாக்கடை நீரை சுத்தம் செய்யாமல், அப்படியே ஆறு, குளம், குட்டை என அனைத்து நீர்நிலைகளிலும் சுத்தம் செய்யாமல் கலக்கின்றன. இதில், வேதனையாதெனில், இந்த நகராட்சிகளை, நிர்வாகம் செய்பவர்கள், மெத்த படித்த IAS அதிகாரிகள். இந்தியத் தண்டணைச் சட்டம், பிரிவு 430-ன் படி ஆற்று நீரைக் குடிக்கத்தகுதியின்றி ஆக்குபவருக்கு மூன்றாண்டுகள் சிறைத்தண்டனை என்று இருந்தும், இந்த சட்டம் பேப்பரில் மட்டுமே உள்ளது. ஆக, யாரிடம், பாதுகாக்கும் அதிகாரம் உள்ளதோ, அவர்களே சட்டத்தை மீறி, செயல்படுகிறார்கள். ஆக, நாம் பெற்ற

சுதந்திரம், நாட்டை அழிக்க பயன்படுத்தபடுகிறது. விளைவு, இயற்கையாகக் கிடைத்த தண்ணீரை மாசுபடுத்திவிட்டு, அதை சுத்தப்படுத்த, செலவு செய்கிறோம். ஆக, ஒரு லிட்டர் குடிதண்ணீர் ஒரு லிட்டர் பாலின் விலைக்கு சமமாகவோ அதிகமாகவோ உள்ளது. என்ன கொடுமை இது!. இந்த அவலத்தை செய்ய வகை செய்தது நமது சுதந்திரமே! எம்மால், , இதுவே பிரிட்ட்ஷ் அரசாயிருந்திருப்பின், இந்த அவலம் இருக்காது என்பதை எம்மால் அறுதியிட்டுக்கூற முடியும் ஆக, சுதந்திரத்தை அனுபவிக்கவும் அதை பாதுகாக்கவும், நமக்குத் தகுதி இல்லை என்பது தெளிவாகிறது. இந்த அவலநிலையில், வெட்கி தலைகுனிவதை விட்டு விட்டு, நமது சுதந்திர தினத்தைக் கொண்டாட எண்ன இருக்கிறது.?

**குடியிருக்க ஒரு சிறு வீடு**:

சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகள் ஆன நிலையிலும், இருக்க இடமின்றி, தெருவோரம் குடும்பம் நடத்தும் கொடுமையை அனுதினமும் காண்கிறோம். ஒரு தாய்க்கு பிறப்பவர்கள் அனவரும் உடன்பிறந்தோர்கள். அதுபோல, ஒரு தாய்நாட்டின் பிள்ளைகள் அனைவரும் உடன்பிறந்தோரே. எனவே, நமது நாட்டின், ஒவ்வொரு ஜீவனுக்கும், அத்தியாவசிய தேவைளைப் பூர்த்தி செய்வது நம் ஒவ்வொருவரின் கடைமையாகும். ஆனால், நாட்டின் வளங்களை சுரண்டித் திண்போர் சொகுசு வீடுகளிலும், உழைப்போர் நடுத்தெருவிலும் வாழும் அவல நிலை. இந்த சுதந்திரத்தின் விளைவால், நாம் இயற்றிய அரசமைப்பு சட்டம். குடிமக்கள் அனைவருக்குமிடையில், சகோதரத்துவத்தை உருவாக்குவதே இந்நாட்டின் நோக்கம் என்று பறை சாற்றியுள்ளோம். மனசாட்சியுள்ள யாரும், இந்நாட்டில் சகோதரத்துவம் இங்கொன்றும் அங்கொன்றும் ஆக இருப்பதைத்தவிர, முற்றிலும் இல்லை என்றே அடித்துக் கூறுவர். ஆக, உடன்பிறந்தோர் பட்டினியால் வாடி குளிரில் வாடி நடுரோட்டில் வாழும்போது, சுதந்திரத்தினத்தைக் கொண்டாட என்னவிருக்கிறது.?

**பாதுகாப்பு:**

அனுதினமும், பச்சிளஞ்சிறார்கள் கற்பழித்து கொள்ளப்படுவதும், இது போன்ற ஈவு இரக்கமற்ற கொடூர மனநிலைக்கு தள்ளும் மதுவை அரசு வழங்குவதும்தான் இந்த சுதந்திரத் திருநாட்டின் பெருமையா?. இது போன்ற கொடுமைகள் இந்நாட்டில் கடந்த அறுபது ஆண்டுகளுக்கும் முன் இல்லை என்பதே எமது கருத்து. பெருந்தலைவர் காமராஜர், கக்கன் போன்ற தன்னலமற்ற தலைவர்கள் ஆட்சி செய்த காலத்தில் இவ்வாறு இல்லை. “காமராஜரும் நல்லவர் அல்லர், அவர் சுவிஸ் வங்கியில் கணக்கு வைத்துள்ளார்” என்று நாக்கூசாமல் பேசி, தார்மீக எண்ணங்களை அழித்த கூட்டமே இந்த அவல நிலைக்குக் காரணமாயிற்று. அந்த போதை மயக்கத்தில் இருந்து இன்றும் நம் மக்கள் மீளாமல் உள்ளனர். அவ்வாறு மீளாமல் இருக்கவே, மக்களை மேலும் போதையேற்றி மது மயக்கத்தில் வைத்திருக்கவே, அரசே பட்டி தொட்டியெங்கும் மதுக்கடைகளை துவக்கியுள்ளது. இந்த அவல நிலையில், போதை மயக்கத்தில், உணமையறியாது, 75வது சுதந்திர தினத்தை கொண்டாடி மக்கள் மகிழ்ந்துள்ளனர்.

**மக்களுக்கு நீதி:**

அநீதிகலை களைய மக்களுக்கு இருக்கும் ஒரே நிவாரணி, நீதி மன்றங்களே. ஆனால், நீதி என்பது, ஏழைகளின், எட்டாக்கனியாக உள்ளது. அரசமைப்பு சட்டத்தினை நிலை நிறுத்துவோம் என்று உறுதி மொழி எடுத்த நீதிபதிகளை கொண்ட, நீதி மண்றங்களில், ஒருவன், தன் வாழ்நாளில், நீதி பெறுவான் என்ற நம்பிக்கை இல்லை. இதையும் சீர் செய்யும் பொறுப்பு நமக்கு இருக்கிறது. எனவே, இந்த சுதந்திரத் திருநாளானது, எம்மை பொருத்தவரை, கிடைத்த சுதந்திரத்தை வீணடித்திவிட்டோமே என்று வெட்கித்தலை குனிந்து வேதனைபட்டு, இதிலிருந்து வெளிவரும் மார்க்கத்தை அறிய வேண்டிய தருணமாகுமே யன்றி, மாறாக, கொண்டாடி மகிழக்கூடியது அன்று. எனவே,

நாம், இந்நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும், அடிப்படை தேவைகள் கிடைபதற்கும், சுகாதாரமான நோயற்ற வகையில் சுற்று சூழலை பேணிக்காப்பதற்கும், இனி வரும் நமது சந்ததிகள் அனைவரும் சுபிட்சமாக வாழ்வதற்கும் வகை செய்யும் ஒரு நல்லாட்சியை அமைத்து, நமது லட்சியத்தை அடைந்தபின் சுதந்திர தினக்கொண்டாட்டத்தினை நடத்துவோம்.

இந்நிலையில், பொதுச்செயலர் அவர்கள், தமது உள்ளக்குமறலில் இருந்து கொட்டியுள்ள வார்த்தைகளில், தெளிவாக தெரிகிறது, நமது நாட்டின் சொத்துக்களை கூறு போட்டு விற்றிவிட்டுத்தான் நமது அரசியல் தலைவர்கள் ஓய்வார்கள் என்பது தெளிவாகிறது. லாபம் ஈட்டும் அரசு நிறுவனங்களை எந்த சுய சிந்தனை உள்ள யாரும் செய்யமாட்டார்கள். ஆனால், நம் அரசு செய்கிறது?. மெத்தப் படித்தவர்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று வெற்றவர்களைக்கொண்டு பணியாற்றும் அரசு, ஒரு நிர்வாகத்தை, உதாரணத்திற்கு, ஏர் இந்தியாவை செம்மையாக நடத்த முடியாதெனில், தனியார் எவ்வாறு லாபகரமாக நடத்துவான். இது ஏன்? என்று ஆராய்ந்து முடிவெடுக்காமல், நிறுவனத்தை விற்றுவிடுவது என்ற முடிவு முட்டாள்தனமானது. ஆக, இந்தைய அரசியல் தலைவர்களால், நாட்டை நிர்வாகிக்க தகுதியில்லை என்றால், நாம் வேறு நாட்டிடம் இந்தியாவை குத்தகைக்கு விட்டு விட வேண்டியதுதானே?. நீதித்துறையும் நீதி வாங்குவதில் காலதமதம் செய்கிறது. ஆக, நீதிமன்றங்களையும் தனியாரிடம் விற்று விடுவார்கள் என்றுதான் தோன்றுகிறது. லஞ்சமும், அரசியல் தலையீடும் தான் காரனம் என்பது, அனைவரும் அறிந்த ஒன்று.

இந்த அவலங்களை போக்க நம் இயக்கம் அடி எடுத்து வைக்க வேண்டும். இல்லையேல், இந்த நாடு சுடுகாடு ஆகிவிடும்.

ஒன்று படுவோம்! அறவழியில் போறாடுவோம்!! இலட்சியத்தை அடைவோம்!!!

தங்கள் உண்மையுள்ள

**ந.சுப்ரமனியன்,**

**தலைவர்**



# மத்திய அரசுக்கு சொந்தமான ரூ.6 லட்சம் கோடி சொத்துகள் ஏலம்:

வே. கார்த்திகை ராஜன்
பொது செயலாளர்

***சென்னை உள்பட 25 ஏர்போர்ட், 400 ரயில் நிலையம், 26,700 கி.மீ. தேசிய நெடுஞ்சாலை உள்ளிட்டவை தாரைவார்ப்பு; நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவிப்பு***

மத்திய அரசுக்குச் சொந்தமான ரூ.6 லட்சம் கோடி சொத்துக்களை ஏலம் விடும் தேசிய பணமாக்கும் திட்டத்தை நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று அறிவித்தார். இதன் மூலம், சென்னை, மும்பை, பெங்களூரு, டெல்லி உட்பட முக்கிய விமான நிலையங்கள், ரயில்வே, நெடுஞ்சாலை, மின் திட்டம், நிலக்கரி சுரங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு சொத்துக்கள் தனியாருக்கு தாரை வார்க்கப்பட உள்ளன. பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு, பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கி வருகிறது. இதற்கு பல்வேறு தரப்பிலும் கடும் கண்டனம் எழுந்து வரும் நிலையில், மத்திய அரசின் பெரும்பாலான சொத்துக்களை தனியாருக்கு குத்தகைக்கு விட்டு பணமாக்கும் புதிய திட்டத்தை தற்போது அறிவித்துள்ளது. அரசு கட்டுப்பாட்டில் இருக்கும் சொத்துகளை ஏலம் விட்டு நிதி திரட்டும் திட்டமே தேசிய பணமாக்கல் திட்டம்.

நாட்டில் உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துவதற்காக புதுமையான, மாற்று வழிகளில் நிதி திரட்டும் நோக்கில் சொத்துக்களைப் பணமாக்கும் திட்டம் குறித்து 2021-22ம் நிதியாண்டின் நிதிநிலை அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருந்தது. அதன்படி, நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட பல்வேறு கட்டுமான திட்டங்கள், முக்கியமான அறிவிப்புகளை நிறைவேற்றவும், அதற்கான நிதியை திரட்டவும், அரசு சொத்துகளை ஏலம், குத்தகைக்கு விட்டு நிதி திரட்டும் திட்டத்தை மத்திய அரசு உருவாக்கியுள்ளது. ஒன்றிய அரசின் உள்கட்டமைப்பு சொத்துக்களை அடுத்த 4 ஆண்டுகளில், அதாவது வரும் 2022 முதல் 2025 வரை, பணமாக மாற்றுவதை இலக்காக கொண்டு தேசிய பணமாக்கல் ஆதார வழிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில், குத்தகைக்கு விட முடிவு செய்யப்பட்டுள்ள மத்திய அரசின் சொத்துக்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வழிமுறைகள் முதலீட்டாளர்களுக்கு தொலைநோக்கை அளிப்பதோடு, சொத்துக்களை குத்தகைக்கு விட்டு பணமாக்கும் மத்திய அரசின் முயற்சிக்கு, இடைக்கால திட்டமாகவும் செயல்படும் என்று நிதி ஆயோக் தெரிவித்துள்ளது. 25 விமான நிலையங்கள், 400 ரயில் நிலையங்கள், 15 ரயில் விளையாட்டு அரங்கங்கள், 26,700 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகள், உள்பட 12 அமைச்சகங்களின் 20 சொத்துக்கள் குத்தகைக்கு விட்டு நிதி திரட்டப்பட உள்ளது. இதன் மூலம் உருவாக்கப்படும் நிதி ஆதாரங்கள் நாட்டின் பொருளாதாரம், அதன் வளர்ச்சிக்கு வலிமை சேர்க்கும் திட்டங்களுக்காக முதலீடு செய்யப்படும் என ஒன்றிய அரசின் முதலீட்டு மற்றும் பொதுச் சொத்து மேலாண்மைத் துறையின் செயலாளர் துகின் காந்தா பாண்டே தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இதற்கான ஆதார வழிமுறைகளை ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று தொடங்கி வைத்தார். கீழ் வரும் துறை வாரியான அமைச்சகங்களின் மூலம் 6 லட்சம் கோடி ரூபாய் நிதி திரட்டப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் மத்திய அரசின் சொத்துகள் பணமாக்கப்படுகிறதே தவிர, அதன் மீது உரிமை கொண்டாட முடியாது. 4 ஆண்டுகளின் முடிவில் குத்தகைக்காரர்களிடம் இருந்து சொத்து மீண்டும் அரசிடம் ஒப்படைக்கப்படும் என்று ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

அரசின் இந்த முடிவுக்கு பல்வேறு தரப்பிலிருந்து எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. அரசின் இந்த முடிவு மிகப் பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும், வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் தான் சாதகமாக அமையும். சாலை வசதிகள் மற்றும் மின்சார வசதியை குறைந்த கட்டணத்தில் பெற்று கொண்டிருந்த மக்கள், இனி அதிகமான கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும் என்ற புகார் எழுந்துள்ளது. ஆனால், கொரோனா போன்ற

பேரிடரால் அரசின் வளர்ச்சி திட்டங்களுக்குப் போதுமான நிதி ஆதாரங்கள் இல்லாத நிலையில், இத்தகைய முடிவுகளை எடுக்க வேண்டியது கட்டாயமாகியுள்ளது என பாஜக தரப்பில் விளக்கம் கூறப்பட்டுள்ளது.

மொத்தம் திரட்டப்பட உள்ள ரூ.6 லட்சம் கோடியில், முக்கிய 5 துறைகளின் மொத்த பங்களிப்பு மதிப்பு மட்டும் 85 சதவீதமாக உள்ளது. அவை பின்வருமாறு:-

**ஏலம் விடப்படும் 5 முக்கிய துறைகள் பங்களிப்பு**

**சாலைகள் 27%**
**ரயில்வே 25%**
**மின் பகிர்மானம் 15%**
**எண்ணெய் மற்றும் எரிவாயு 8%**
**தொலைத் தொடர்பு துறை 6%**

**நிதியாண்டு வாரியாக இலக்கு**

**2020-21 ரூ.88,190 கோடி**
**2021-22 ரூ.1,62,422 கோடி**
**2022-23 ரூ.1,79,544 கோடி**
**2023-24 ரூ.1,67,345 கோடி**

**மக்கள் விரோத நடவடிக்கை'**

திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை கொறடா சுகேந்து சேகர் ராய் கூறுகையில், ``மத்திய அரசு கார்ப்பரேட் நிறுவனங்களிடம் அடிபணிந்து விட்டது. அரசு பெரும் நிறுவனங்களால் நடத்தப்படுகிறது. முதலாளித்துவத்தினால் அரசு தனியார் மயமாக்கப் பட்டுள்ளது. ரயில்வே, துறைமுகங்கள் என அனைத்தையும் அரசு விற்று வருகிறது. தேசிய பணமாக்கல் என்பதன் பேரில் தனியார் உடைமையாக்கப்பட்டுள்ளது. இது மக்கள் விரோதமானது,'' என்று தெரிவித்தார்.

**தாரை வார்க்கப்படும் சொத்துக்கள்**

* சென்னை, டெல்லி, மும்பை உள்ளிட்ட 25 விமான நிலையங்கள் மூலம் ரூ.20,782 கோடி
* 26,700 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகள் மூலம் ரூ.1,60,200 கோடி
* 160 நிலக்கரி சுரங்கம் மூலம் ரூ.29,000 கோடி
* 8,154 கி.மீ. தொலைவு இயற்கை எரிவாயு குழாய் மூலம் ரூ.24,462 கோடி
* ஐஓசி உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களின் 3,930 கிமீ பைப்லைன் மூலம் ரூ.22,504 கோடி
* பிஎஸ்என்எல் மற்றும் எம்டிஎன்எல் ஆகியவற்றுக்கு சொந்தமான 2,86,000 கி.மீ. பைபர் லைன் மற்றும் 14,197 தொலைபேசி கோபுரங்கள் மூலம் ரூ.35,100 கோடி
* 400 ரயில் நிலையங்கள், 90 பயணிகள் ரயில், 15 விளையாட்டு அரங்கம், ரயில்வே குடியிருப்பு உள்ளிட்டவை மூலம் ரூ.1,52,496 கோடி
* 28,608 சர்கியூட் கிலோ மீட்டர் மின் பகிர்மான வழிதடத்தின் மூலம் ரூ.45,200 கோடி
* 6 ஜிகா வாட்ஸ் மின் உற்பத்தி சொத்துகள் மூலம் ரூ.39,832 கோடி
* டெல்லி நேரு விளையாட்டு அரங்கம், பெங்களூரு, ஜிராக்பூர் விளையாட்டு அரங்கங்கள் மூலம் ரூ.11,450 கோடி
* ரியல் எஸ்டேட் திட்டத்தின் கீழ் 240 ஏக்கர் குடியிருப்பு காலனிகள் மூலம் ரூ.15,000 கோடி
* 9 துறைமுகங்கள், 31 துறைமுக திட்டங்கள் மூலம் ரூ.12,828 கோடி

**எந்தெந்த துறைகள்? எவ்வளவு கோடி?**

மத்திய அரசு நிதி திரட்டுவதற்காக பல்வேறு முக்கிய துறைகளை தனியாருக்கு தாரை வார்க்கிறது. தனியாருக்கு ஏலம் விடுவதன் மூலம் துறை வாரியாக திரட்டப்பட உள்ள நிதி விவரம்:

தேசிய நெடுஞ்சாலைகள் ரூ.1,62,200 கோடி
ரயில்வே ரூ.1,52,496 கோடி
மின் பகிர்மானம் ரூ.45,200 கோடி
மின் உற்பத்தி ரூ.39,832 கோடி
இயற்கை எரிவாயு பைப்லைன் ரூ.24,462 கோடி
பைப்லைன் உற்பத்தி ரூ.22,504 கோடி
தொலைத்தொடர்பு ரூ.35,100 கோடி
கிடங்கு ரூ.28,900 கோடி
சுரங்கம் ரூ.28,747 கோடி
விமான நிலையங்கள் ரூ.20,782 கோடி
துறைமுகங்கள் ரூ.12,828 கோடி
விளையாட்டு அரங்கம் ரூ.11,450 கோடி
நகர்புற ரியல் எஸ்டேட் ரூ.15,000 கோடி

xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

## "விவாதங்களின்றி சட்டங்கள் இயற்றப்படுவது வருத்தமளிக்கிறது" உச்சநீதிமன்ற நீதிபதி என்.வி.ரமணா கவலை!

உச்சநீதிமன்ற வளாகத்தில் நடந்த 75வது சுதந்திர தின விழா நிகழ்ச்சியின் போது தலைமை நீதிபதி என்.வி.ரமணா பேசுகையில், "விவாதங்கள் இல்லாமல் நாடாளுமன்றத்தில் புதிய சட்டங்கள் இயற்றுவது வருத்தமளிக்கிறது. போதுமான விவாதங்கள் இன்றி சட்டங்கள் இயற்றப்படுவதால் அதிக வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. அதேபோல் விவாதங்கள் நடக்காததால் சட்டத்தின் நோக்கத்தை புரிந்து கொள்ள முடியவில்லை. சட்டம் இயற்றுதலில் நிறைய இடைவெளி இருக்கிறது" என அவரது வருத்தத்தை பதிவு செய்துள்ளார்.

அறிவார்ந்தவர்கள், வழக்கறிஞர்கள் அவைகளில் இல்லாததால் இது நடக்கிறது. சட்ட சமூகம் பொது வாழ்க்கையில் தீவிரமாக பங்கேற்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்

இதே நேரம் வழக்கறிஞர்கள் பனம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல் படக்கூடாது என்று கேட்டுக்கொண்டார், அறிவார்ந்த அறிஞர்கள் பணத்தை எதிபார்க்காமல், பொது வாழ்வுக்கு வர வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

xxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxxx

**இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.**
நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு **80 (G)** யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .
**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**

# குத்தகைக்கு விட்டு குந்தித் தின்பது தேச அவமானம்!

தேசிய பணமாக்கல் திட்டம் என்ற பெயரில் அரசின் வசமுள்ள சொத்துகள், மற்றும் பொதுத் துறை நிறுவனங்களை தனியாருக்கு குத்தகைக்கு தரப் போகிறார்களாம்! இந்தியாவின் சாமானிய குடிமக்களுக்கு உயர்தரத்தில் அணுகக்கூடிய வகையில் உள் கட்டமைப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காக இதை செய்வதாக சொல்லப்பட்டுள்ளது. இதன்படி நாட்டின் 25 விமான நிலையங்கள், 400 ரயில் நிலையங்கள், 15 ரயில் விளையாட்டு அரங்கங்கள், 26,700 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், மின் உற்பத்தி மற்றும் விநியோகம், ,சுரங்கம், எரிவாயுக் குழாய் உள்பட 12 அமைச்சகங்களின் 20 சொத்துக்கள் குத்தகைக்கு விட்டு நிதி திரட்டப்பட உள்ளது.

அதாவது, "எதிர்கட்சிகள் குற்றம் சுமத்துவதைப் போல, நாங்களொன்றும் அரசு சொத்தை விற்கவில்லை. குத்தகைக்குத் தான் விடுகிறோம்" என்கிறார்கள்! ஏன் குத்தகைக்கு விட வேண்டும்..? அரசாங்கத்தால் அதை நிர்வகிக்க முடியவில்லை, அதற்கான நிர்வாகத் திறமை, உழைப்பு, நேர்மை பற்றாகுறையால் விற்கிறார்கள் என்றும் எடுத்துக் கொள்ளலாம் தானே!

சுதந்திரம் பெற்றது தொடங்கி 74 ஆண்டுகளிலான கடும் முயற்சியால், அர்ப்பணிப்பால் உருவாக்கப்பட்டு இது நாள் வரையிலான அரசாங்கங்களால் நிர்வகிக்கப்பட்டவை தாமே இவைகள்! உங்களால் ஏன் முடியவில்லை. ஏனென்றால், நீங்கள் உட்கார்ந்து தின்று பழக்கப்பட்ட பரம்பரை! உழைத்து காசு சேர்த்தால் அது பெருமை! உட்கார்ந்து சாப்பிட்டால் அது சிறுமை என்பதை உணராத பண்ணை, மிராசுதாரர்களின் வாரிசுகளால் உருவாக்கப்பட்ட கட்சி தானே பாஜக!

தேசிய நெடுஞ்சாலைகளை ரூ.1,62,200 கோடிக்கும், ரயில்வே வழித்தடங்களை ரூ.1,52,496 கோடிக்கும் குத்தகைக்கு கொடுக்கிறார்கள் என்றால், வாங்கியவர்கள் இவற்றில் கொடுத்த பணத்தையும் தாண்டி நல்ல லாபம் பார்க்காமல் இருக்கமாட்டார்களே! இதனால் இயல்புக்கு மாறாக அதிக பேருந்து மற்றும் ரயில் கட்டணங்கள் உயரும்! சரக்கு கட்டணங்களும் உயரும். விலைவாசிகளும் உயரும்! மின் உற்பத்திக்கு ரூ.39,832 கோடியும், மின் பகிர்மானத்திற்கு ரூ.45,200 கோடியும் குத்தகைப் பணம் கொடுக்கிறார் என்றால், அவர் சமூக சேவை செய்யவா வருவார்..? குறைந்த கூலி, நிறைந்த லாபம் என்பது தானே முதலாளிகளின் மந்திரச் சொல்! இனி தொழிலாளர்களுக்கு பணி பாதுகாப்பும் கேள்விக்குறியாகுமே! மின் கட்டணங்களும் தாறுமாறாக உயருமே!

இந்த ரீதியில் இயற்கை எரிவாயு பைப்லைன் ரூ.24,462 கோடி ! பைப்லைன் உற்பத்தி ரூ.22,504 கோடி! தொலைத் தொடர்பு ரூ.35,100 கோடி! கிடங்குகள் ரூ.28,900 கோடி! சுரங்கம் ரூ.28,747 கோடி! விமான நிலையங்கள் ரூ.20,782 கோடி! துறைமுகங்கள் ரூ.12,828 கோடி! விளையாட்டு அரங்கண்ங்கள் ரூ.11,450 கோடி! நகர்புற ரியல் எஸ்டேட் ரூ.15,000 கோடி..என எல்லாவற்றையும் தூக்கி குத்தகைக்கு விட்டுள்ளனர். இந்தத் திட்டத்தின்மூலம் அடுத்த நான்கு ஆண்டுகளில், 2021-22-லிருந்து 2024-2025-ம் ஆண்டு வரை மத்திய அரசுக்கு ரூ.6 லட்சம் கோடி வருமானம் கிடைக்கும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வளவு பணம் கிடைத்தாலும் அதில் என்ன பயன்? '**குந்தி சாப்பிட்டால் குன்றும் அழியும்**' என்பது பழமொழி. குத்தகைக்கு விடுவதா வளர்ச்சி..? தன் மக்களையே சுரண்டி பணம் ஈட்டுவதால் பலன் என்ன..? மக்கள் பலன் பெறுவதில் தான் வளர்ச்சி உள்ளது!

"டாஸ்மாக் மது விற்பனையால் அரசுக்கு வருமானமா..? இழப்பா..?" என்றால், "கண்டிப்பாக பேரிழப்பு தான். உழைக்கும் வர்க்கத்தின் பெரும்பகுதி உடல் நலன் குன்றி நோயாளியாகிறது என்றால், அவன் நாட்டுக்கும் பாரம்; வீட்டுக்கும் பாரமாகிவிடுகிறான்

என்பதை கண் கூடாக காண்கிறோமே..!" மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் சொத்துகளை குத்தகைவிட்டு பணமாக்கி இதன்மூலம் அரசுக்கு வருமானத்தை ஈட்டும் வழியை உருவாக்குவது தான் தேசிய பணமாக்கல் திட்டம் என நிதி ஆயோக் விளக்கம் அளித்துள்ளது. அப்ப அரசாங்கத்தையும் கூட சேர்த்து தான் குத்தகைவிட்டுப் போங்களேன்.

நிர்வாகமும், தெரியாது, நேர்மையும் கிடையாது, உழைக்கவும் தயாரில்லை என்றால், எதற்கு அரசாங்கம்..? நாடாளுமன்ற கட்டிடத்தை குத்தகைக்கு விடுங்கள், உள்ளே நுழையும் எம்.பிக்கள் இவ்வளவு கொடுத்து தான் நுழைய வேண்டும். எவ்வளவு நேரம் இருக்கிறார்களோ..அதற்கு தக்க கட்டணம் மணிக்கணக்கில் வசூலிக்கப்படும் என்று வசூலித்து தாங்கள் லாபம் பார்த்து அரசுக்கும் தருவார்கள் தானே!

**பொதுத் துறை நிறுவனம் எனும் விதை நெல்லை விற்கும் மாபாவிகள்!**

"மக்கள் பணத்தில் இந்தியாவின் ஆபரணங்களான பொதுத் துறை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டது. 70 வருடமாக அரசு கஷ்டப்பட்டு உருவாக்கிய நிறுவனங்கள் தற்போது தனியார்வசம் சென்று கொண்டுள்ளன! அரசு துறையில் ஒரு சில தனியார் நிறுவனங்களை மட்டும் அனுமதித்து, அவர்களின் ஆதிக்கத்தை வளர்த்துவிட பாஜக அரசு அரசு நினைக்கிறது. இதனால் மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள்.. இதனால் மக்களின் வேலைவாய்ப்புகள் தான் பாதிக்கப்படும். தனியார் நிறுவனங்கள் கோலோச்சுவதால் வேலைவாய்ப்பு குறையும். இளைஞர்களின் வேலை வாய்ப்பு ஏற்கனவே பறிக்கப்பட்டுவிட்டது, விவசாய சட்டங்கள் மூலம் விவசாயிர்களின் உரிமைகளும் பறிக்கப்பட்டுவிட்டது. தனது சில பணக்கார நண்பர்கள் பலன் அடைய வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக பிரதமர் மோடி இது போன்ற திட்டங்களை கொண்டு வருகிறார்." என ராகுல் காந்தி கூறியுள்ளார். 'அரசாங்கம் என்பது வெறும் அதிகாரத்திற்கு மட்டுமானதல்ல, அறத்தை நிலை நாட்டவும் தான்' என்பது புரியாதவர்கள் ஆட்சிக்கு வந்திருப்பது நம் போதாத காலமாகும்.

**பொதுத் துறையை பொசுக்கவா மல்லிகா சீனிவாசன்..?**

ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இதுவல்ல பணம் ஈட்டும் வழிமுறைகள்! வெள்ளைக்காரனை எதிர்த்து கப்பல்விட முயன்றாரே வ.உ.சிதம்பரனார்! ஏன் அவ்வளவு கஷ்டப்பட்டார். நாம் செய்ய வேண்டும். அதை சேவை நோக்கோடு செய்ய வேண்டும் என்று தானே! இன்று குப்பை அள்ளுவது தொடங்கி குடிநீர் விநியோகம் வரை வெளிநாட்டு கம்பெனிகளுக்கு குத்தகைவிட விரும்புகின்றனர் ஆட்சியாளர்கள்! இது அவமானம்! அரசாங்கம் என்ற இயந்திரத்தை இயக்கி, மக்களுக்கு தொண்டு செய்யத் தான் மக்களால் ஓட்டு போடப்பட்டது! சொத்து மற்றும் பணம் ஈட்டுவது என்பது உற்பத்தி சார்ந்ததாக இருந்தால் நாட்டுக்கும், மக்களுக்கும் நலமாகும். அது வேலை வாய்ப்பை தருவதோடு, சேவையும், இணைந்ததாக இருந்தால் அது தான் அறம்! இதெல்லாம் அறத்தின் வழி செயலாற்ற விரும்பும் ஆட்சியாளர்களுக்குத் தான் புரியும். தனியார் கைகளுக்கு குத்தகைக்கு போவது காலப் போக்கில் தனியாருக்கே கைமாறுவதாகவும் கூட ஆகலாம்! அதன் முதல் கட்டம் தான் இந்த குயுக்திகள் நிறைந்த குத்தகை திட்டம்!

நன்றி (சாவித்திரி கண்ணன், அறம் இணைய இதழ், August 29, 2021)

**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**

| | |
|---|---|
| திரு **N** சுப்ரமணியன், தலைவர் | **: 9444274352** |
| திரு **V** கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் | **: 87783 12823** |
| திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் | **: 90031 25142** |

## ஊழல்புகார்கள்; ஆட்சி மாறினாலும் காட்சிகள் மாறவில்லையே..!

அதி மோசமான கடந்த அதிமுக ஆட்சியை மக்கள் தூக்கி எறிந்தனர். பத்தாண்டுகளுக்கு பிறகு வந்துள்ள திமுக ஆட்சியாளர்கள் ஒரு பக்குவத்தை பெற்றிருப்பார்கள் என மக்கள் நம்பினார்கள்! ஒரு பக்கம் மக்கள் விரோத - மாநில உரிமைகளை பறிக்கும் பாஜக ஆட்சியை எதிர்க்க வேண்டிய சரித்திர கடமையையும் திமுக சந்திக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ள நிலையில் எப்படி இந்த ஊழல்களுக்கு துணை போகிறது? முதல்வர் ஸ்டாலின் கவனத்திற்கு இது போனதா எனத் தெரியவில்லை.

இந்த ஆட்சியில் சில நல்ல முன்னேற்றங்கள், பாசிட்வ்வான அணுகுமுறைகள் நிதித் துறை, சுகாதாரத் துறை, இந்து சமய அற நிலையத் துறை ஆகியவற்றில் காண முடிந்தாலும் பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைத் துறை, மின் துறை ஆகியவற்றில் ஆட்சி மாறினாலும், காட்சிகள் அப்படியே மாற்றமின்றி தொடர்கின்றன

பொதுப் பணித்துறையை பிரித்து நீர்வளத்துறைக்கு அமைச்சர் துரைமுருகன் நியமிக்கப்பட்டார். அவரது துறையில் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள வேலைகளின் காண்டிராக்டர்களிடம், ”கடந்த ஆட்சியாளர்களுக்கு கமிஷன் கொடுத்ததைக் கொண்டு தற்போது நீங்கள் எப்படி வேலையை தொடர முடியும்? ஆட்சி மாறி இருக்குது இல்ல, அதனால குறைந்த பட்சம் ஒரு நான்கு சதவிகிதம் தாங்க. மற்றபடி புது ஆர்டர் எடுத்து பண்ணும் போது சென்ற ஆட்சியாளர்களுக்கு தந்ததை கொடுத்தாலே போதுமானது” என கேட்கப்பட்டுக் கொண்டுள்ளதாக அத்துறையில் புலம்ப தொடங்கியுள்ளனர். அது போல என்ஜினியர்கள், அதிகாரிகளின் இடமாறுதலுக்கான கட்சிக்காரர்களின் சிபாரிசுகள் வந்து குவிந்துள்ளதாம்! எல்லாவற்றும் ரேட் நிர்ணயித்து கல்லா கட்டத் தொடங்கிவிட்டனர் என்கிறார்கள்!

இதே நிலைதான் அச்சு பிறழாமல் எ.வ.வேலுவின் நெடுஞ்சாலைத்துறை, செந்தில் பாலாஜியின் மின்துறை ஆகிவற்றிலும் நடந்து கொண்டுள்ளது. சென்ற ஆட்சியாளர்களுக்கு ஸ்கெட்ச் போட்டு காசு பண்ண கற்றுக் கொடுத்த அதே அதிகாரிகளே அப்படியே இந்த ஆட்சியாளர்களுக்கு தற்போது வேண்டப்பட்டவர் ஆகிவிட்டனர் என்பது தான் கொடுமை. அதற்கான ஒரு சின்ன சாம்பிள் தான் இது!

நெடுஞ்சாலைத்துறையில் அண்மையில் தலைமைப் பொறியாளர் நிலையிலேயே இரண்டு அதிகாரிகள் அரசுக்கு விருப்ப ஓய்வு விண்ணப்பங்கள் அனுப்பி, பின்னர் இரண்டு தலைமைப் பொறியாளர்களுமே விருப்ப ஓய்வு பெறாமலேயே முடிந்திருக்கிறது. நெடுஞ்சாலைத்துறையில் சுமதி என்ற தலைமைப் பொறியாளர் ஊழலுக்கு பேர்போனவர்! அவர் ஆட்சி மாறினால் தண்டிக்கப்படுவோம் என பயந்து விருப்ப ஓய்வு விண்ணப்பத்தை கடந்த அதிமுக ஆட்சியில் கொடுத்துவிட்டு, அனுமதிக்கப்பட்ட மூன்று மாதங்களுக்குள் - அதாவது திமுக ஆட்சிக்கு வருவதற்கு ஓரிரு வாரங்களுக்கு முன்பு - எப்படியோ ஒரு தைரியத்தில் அதைத் திரும்பப் பெற்றுக் கொண்டார். தலைமைப் பொறியாளர் விஜயா என்பவரும் விருப்ப ஓய்வு விண்ணப்பம் கொடுத்திருந்தார். அவர் விருப்ப ஓய்வில் செல்லத் திட்டமிட்ட அன்று அதை நிராகரித்து அரசு ஆணையிட்டது. அடுத்தடுத்து மிகப் பெரிய பொறுப்பில் இருப்பவர்கள் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பிக்கிறார்கள். அதில் பல ரகசியங்கள் மறைந்திருக்கின்றன.

தனது தவறுகள் கண்டுபிடிக்கப்பட முடியாது என்கிற உறுதியில் விருப்ப ஓய்வு விண்ணப்பத்தைத் திரும்பப் பெற்ற **தலைமைப் பொறியாளர் சுமதி** ,சென்னை பெருநகர எல்லைக்குள் நடைபெறும் பாலங்கள் கட்டுமானப் பணிகளை மேற்பார்வை செய்பவர்.

தேர்தல் நெருங்குகிற சமயத்தில் பணிகள் வேகமாக முடிவடைந்து அதிமுக ஆட்சிக்கு நல்ல பெயர் கிடைக்க வேண்டும் என்பதால் ஒப்பந்ததாரர்களுக்கு பல்வேறு நன்மைகளை விதிகளுக்குப் புறம்பாக செய்து கொடுத்து அன்றைய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியிடம் பாராட்டுப் பெற்றவர். தேர்தல் நெருங்க நெருங்க, திமுக ஆட்சிக்கு வந்து இந்தத் தவறுகள் எல்லாம் தெரிந்து நம் மீது நடவடிக்கை பாய்ந்துவிடுமோ என்று பயந்து விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பம் செய்தார். ஆனால், தற்போது விண்ணப்பத்தைத் திரும்பப் பெறுகிறேன் என்று சொல்லி பதவியில் நீடிக்கிறார். கடந்த ஆட்சியில் தான் செய்த தவறுகளையே இந்த ஆட்சியாளர்களும் எதிர்பார்க்கிறார்கள் என்பதால் தான் இந்த மாற்றம்.

குற்றச்சாட்டுகளுக்கு ஆளானதால் விருப்ப ஓய்வு விண்ணப்பம் நிராகரிப்புக்குள்ளான தலைமைப் பொறியாளர் **தலைமைப் பொறியாளர் விஜயா** துறையில் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு ஆளானவர். தஞ்சாவூர் சாந்த பிள்ளை கேட் பாலம், புதுக்கோட்டை பேயாடிக்கோட்டை பாலம், ஈரோடு டெண்டர் வழக்கு என்று பல குற்றச்சாட்டுகள் அவர் மீது நிலுவையில் உள்ளன. திமுக ஆட்சிக்கு வந்துவிட்டால் அவற்றை யெல்லாம் விசாரிக்கத் தொடங்கும் என்றும் தனக்கு பிரச்சினை ஏற்படும் என்று எண்ணி விருப்ப ஓய்வுக்கு முயன்ற அவரை புதிய அரசு விருப்ப ஓய்வு கொடுக்காமல் விண்ணப்பத்தை நிராகரித்து, துறையில் தலைமைப் பொறியாளராகத் தொடர அனுமதித்திருக்கிறது.
**இது எவ்வளவு பெரிய அபத்தம்?**

தலைமைப் பொறியாளர் விஜயா திருச்சி கிராம சாலைகள் வட்டத்தின் கண்காணிப்புப் பொறியாளராக இரண்டு ஆண்டுகளுக்கு முன் பணியாற்றினார். அப்போது 'குட்கா' விஜயபாஸ்கர் என்ன சொல்கிறாரோ அதை மட்டுமே செய்து வந்தார். ஒரு முறை விஜயபாஸ்கரின் தந்தை போட இருந்த டெண்டரில் வேறொருவர் போட முயற்சி செய்தார் என்பதற்காகவே விஜயா அவர் மீது காவல்துறையில் புகார் கொடுத்து வழக்கு பதிய வைத்தார். பிறகு அந்த ஒப்பந்ததாரர் முன் ஜாமின் கேட்டு மனு போட்டுவிட்டு ஊர் ஊராக ஓடிக் கொண்டிருந்தார் என்பது தனிக்கதை.

திருச்சியில் உள்ள தனது அலுவலகத்துக்கே வராமல், எப்பொழுதாவது வந்து எந்தப் பணியையும் ஆய்வு செய்யாமல் அமைச்சர்களின் தயவு மட்டும் இருந்தால் போதும்: நெடுஞ்சாலைத்துறையில் எல்லா வசதிகளோடும் வாழலாம் என்று இருந்தவர் இந்த விஜயா. அதனால்தான் அவர் கண்காணிப்புப் பொறியாளராக இருந்தபொழுது கட்டப்பட்ட பாலங்கள் பல திறந்து வைத்த இரண்டு, மூன்று மாதங்களுக்குள் இடிந்து விழுந்தன. ஆனாலும் அவர் மீது இவ்வளவு கரிசனம் ஏன் இப்பொழுதும் காட்டப்படுகிறது என்று புரியவில்லை. விருப்ப ஓய்வு விண்ணப்பத்தைத் திரும்பப் பெற்றதும், நிராகரிக்கப்பட்டதும் தவறுகளுக்கான ஆதாரத்தை மறைப்பதற்கும் அழிப்பதற்குமே வழி வகுக்கும்!

பொதுவாக குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கி இருக்கிற அதிகாரியிடம் உள்ள பொறுப்புகளை பறித்துவிட்டு அவருக்கு நோட்டீஸ் கொடுத்து இந்த நேரம் விசாரணை நடந்திருக்க வேண்டும். அதிகபட்சம் நான்கு மாதத்திற்குள் தண்டனை கொடுக்க வேண்டும். மாறாக அதே பதவியில் தொடர வைத்தால், நல்ல சம்பளத்துடன் இருக்கிற நேரத்தை எல்லாம் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமாக விளங்கும் ஆவணங்களை மறைக்கவும், அழிக்கவுமே வழி வகுக்கும். அது ஒட்டுமொத்தமாக சென்ற ஆட்சியாளர்களையும் சேர்த்து காப்பாற்றிவிடும் என்பதே உண்மை!

***-ஜீவா கணேஷ்*** July 3, 2021(அறம்)

## 'தேச துரோக சட்டப்பிரிவு 124ஏ' 75 வருடங்களுக்குப் பிறகும் அவசியமா? மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி கேள்வி'

**தேச விரோத குற்றச்சாட்டை சுமத்த பயன்படுத்தப்படும் இந்திய தண்டனை சட்டத்தின் 124ஏ பிரிவு, நாடு சுதந்திரம் அடைந்த 75 பிறகும் அவசியமாகிறதா என்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி. ரமணா மத்திய அரசுக்கு கேள்வி எழுப்பியிருக்கிறார்.**

இது தொடர்பாக ஓய்வு பெற்ற இந்திய ராணுவ மேஜர் ஜெனரல் எஸ்.ஜி.வொம்பாட்கெரே தொடர்ந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதிகள் அமர்வு, விடுதலை உணர்வை ஒடுக்கவும் காந்தி, பாலகங்காதர் திலக் போன்றோருக்கு எதிராகவும் ஆங்கிலேயர்களால் பயன்படுத்தப்பட்ட காலனிய கால சட்டப்பிரிவு இன்னும் தேவையா என்று இந்திய அரசின் தலைமை சட்ட ஆலோசகரிடம் (அட்டர்னி ஜெனரல்) கேள்வி எழுப்பியது.

இதைத்தொடர்ந்து இந்த வழக்கை, இதே விவகாரத்துடன் தொடர்புடைய எடிட்டர்ஸ் கில்ட் ஆஃப் இந்தியா தொடர்ந்த வழக்குடன் சேர்த்து ஒரே விவகாரமாக விசாரணைக்கு பட்டியலிட நீதிமன்ற பதிவாளருக்கு தலைமை நீதிபதி உத்தரவிட்டார்.

முன்னதாக, எடிட்டர்ஸ் கில்ட் ஆஃப் இந்தியா சார்பில் ஆஜரான வழக்கறிஞர் ஷியாம் திவான், "இந்த விவகாரம் தங்களுடைய மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள அதே அம்சத்தை கொண்டுள்ளது. சட்டப்பிரிவை பயன்படுத்துவதில் சில வழிகாட்டுதல்கள் இருந்திருக்க வேண்டும். தற்போதைய சூழலில் 124ஏ பிரிவு அரசியலமைப்புக்கு எதிராகவும் அது அப்பட்டமாக தவறாக பயன்படுத்தப்படுவது பற்றியும் நாங்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளோம்," என்று தெரிவித்தார்.

- தேச துரோக வழக்கு: எதிர்ப்புக் குரலை அடக்க இந்திய அரசின் ஆயுதமா?
- நரேந்திர மோதிக்கு எதிராக குழந்தைகள் நாடகம்: பள்ளி மீது 'தேச துரோக' வழக்கு
- குண்டர் சட்டம் - 7 முக்கிய தகவல்கள்

இதைத்தொடர்ந்து அரசின் தலைமை ஆலோசகரிடம் தலைமை நீதிபதி ரமணா கேள்விகளை எழுப்பினார். "தேச விரோத சட்டப்பிரிவின் கீழ் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளின் வரலாற்றை பார்த்தீர்கள் என்றால், தண்டனை விகிதம் மிகக் குறைவாகவே இருந்துள்ளதை அறியலாம். இந்த சட்டப்பிரிவு தவறாக பயன்படுத்தப்படும் விதத்தை, ஒரு மரத்தை அறுக்க கொடுக்கப்பட்ட ரம்பத்தை பயன்படுத்தி ஒட்டுமொத்த காட்டையே அழிப்பதற்கு இணையாக ஒப்பிடலாம்," என்று குறிப்பிட்டார் தலைமை நீதிபதி.

தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் 66ஏ பிரிவின்படியும் ஆயிரக்கணக்கான வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த சட்டப்பிரிவு ரத்து செய்யப்பட்ட பிறகும் எப்படி அந்த பிரிவை சட்ட அமலாக்க அமைப்புகள் பயன்படுத்துகின்றன என்றும் தலைமை நீதிபதி ரமணா கேள்வி எழுப்பினார்.

"தவறாக சட்டப்பிரிவு பயன்படுத்தப்படும் போது அதற்கு நிர்வாகத்தில் இருப்பவர்கள் பொறுப்புடைமை ஆக்கப்படுவதில்லை. இது தொடர்பாக பிற வழக்குகளையும் ஆராய்ந்து நிலுவையில் உள்ள அந்த அனைத்து வழக்குகளையும் ஒரே விவகாரமாக விசாரிக்கப்படும்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய விடுதலைக்குப் பிறகு பல்வேறு பழைய சட்டங்களை மறுஆய்வுக்கு உட்படுத்தி திருத்தம் செய்து கொண்ட இந்திய அரசு, எப்படி இந்த குறிப்பிட்ட சட்டப்பிரிவை மட்டும் மாற்ற பரிசீலிக்காமல் போனது என்றும் தலைமை நீதிபதி கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த கே.கே. வேணுகோபால், "இந்த சட்டத்தை ரத்து செய்ய வேண்டியதில்லை. அதற்கு பதிலாக அதன் நோக்கம் சட்டபூர்வமாக அமல்படுத்தப் படுவதற்கான வழிகாட்டுதல்களை வகுக்கலாம்," என்று கூறினார். இருப்பினும், ஒரு தரப்பால் எதிர் தரப்பு குரலை கேட்க முடியாமல் போனால் பிறகு எதிர் தரப்புக்கு எதிராக இந்த சட்டப்பிரிவு பயன்படுத்தப்படலாம் அல்லது தவறாக ஒரு குற்றச்சாட்டில் சேர்க்கப்படலாம். தனி நபர்களைப் பொருத்தவரை இது மிகவும் தீவிர பிரச்னை என்று தலைமை நீதிபதி தெரிவித்தார்.

இந்த வழக்கின் மனுதாரர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல். இந்த நாட்டுக்காக தமது மொத்த வாழ்வையும் அவர் அர்ப்பணித்துள்ளார். எனவே இதை உள்நோக்கம் கொண்ட மனுவாக கருதி விட முடியாது என்று தலைமை நீதிபதி கூறினார். இதைத்தொடர்ந்து எடிட்டர்ஸ் கில்டு ஆஃப் இந்தியா மனுவுடன் வொம்பாட்கெரே மனுவையும் சேர்த்து விசாரணைக்குப் பட்டியலிட அறிவுறுத்திய நீதிபதி, அதன் பிறகு மனுதாரர்களுக்கு உரிய நோட்டீஸ் அனுப்பவும் உத்தரிட்டார்.

**124ஏ சட்டப்பிரிவுக்கு எதிரான வாதம்**

1962ஆம் ஆண்டில் கேதார்நாத் சிங்குக்கும் இந்திய அரசுக்கும் இடையே நடந்த வழக்கில் இந்திய தண்டனை சட்டத்தின் 124ஏ பிரிவு உறுதிப்படுத்தப்பட்டது. அந்த தீர்ப்பை மறுஆய்வு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையுடன் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருக்கிறார் வொம்பட்கெரே.

இந்திய அரசியலமைப்பின் 19(1) விதியில் கருத்து சுதந்திரத்துக்கான அடிப்படை உரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த உரிமையின்படி ஒருவர் தெரிவிக்கும் கருத்தை ஏற்க முடியாமல், அதை அரசுக்கு எதிரான செயல்பாடு போல குற்றம்சாட்டி கிரிமினல் குற்றமாக்க முற்படுவது, குடிமக்களுக்கு அரசியலமைப்பு வழங்கிய அடிப்படை கருத்துச் சுதந்திரத்தை மீறும் வகையில் உள்ளது என்று மனுவில் பொம்பட்கெரே கூறியிருந்தார். எனவே, அரசியலமைப்பின் 14, 21 ஆகியவற்றை பின்பற்றும் வகையில், அவற்றுக்கு எதிரான சட்டப்பிரிவு அவசியத்தை மறுஆய்வுக்கு உட்படுத்தும் தேவை எழுகிறது என்று மனுவில் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது.

124ஏ சட்டப்பிரிவு, கேதார்நாத் வழக்கில் உறுதிப்படுத்தப்பட்டது என்பதற்காக அதே அளவுகோலை வைத்து அந்த சட்டப்பிரிவை தொடர்ந்து பயன்படுத்தக் கூடாது என்றும் அதுவே அந்த சட்டப்பிரிவை ஏன் மறுஆய்வு செய்யக்கூடாது என்ற கேள்வியின் அவசியத்தை நீதிமன்றத்துக்கு உணர்த்துவதாகவும் பொம்பாட்கெரே மனுவில் கூறியுள்ளார். இதே 124ஏ சட்டப்பிரிவுக்கு எதிராக மணிப்பூரை சேர்ந்த கிஷோர் சந்திரா வாங்கெம்சா, சத்தீஸ்கரை சேர்ந்த கன்னையா லால் ஷுக்லா ஆகிய இரு செய்தியாளர்களும் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர். அந்த வழக்கில் மத்திய அரசு பதில் அளிக்க நோட்டீஸ் அனுப்புமாறு யு.யு.லலித், இந்திரா பானர்ஜி, கே.எம். ஜோசஃப் ஆகிய நீதிபதிகள் அமர்வு கடந்த ஏப்ரல் மாதம் உத்தரவிட்டிருந்தது.

**124ஏ சட்டப்பிரிவு என்ன சொல்கிறது?**

எவரேனும், பேசப்பட்ட அல்லது எழுதப்பட்ட வார்த்தைகளால், அல்லது சைகைகளால், அல்லது பார்க்கக்கூடிய வெளிப்படுத்தலால் அல்லது மற்றபடி இந்தியாவில் சட்டபூர்வமாக அமைந்த அரசாங்கத்தின் மீது வெறுப்பு அல்லது அவமதிப்பை ஏற்படுத்தினால் அல்லது ஏற்படுத்த முயன்றால் அல்லது அவநம்பிக்கையைத் தூண்டினால் அல்லது தூண்ட முயன்றால் அது குற்றமாக கருதப்படும். இதற்கு அபராதத்துடன் கூடிய ஆயுள் சிறை அல்லது அபராதத்துடன் கூடிய மூன்று வருடங்கள் வரை நீட்டிக்கப்படக்கூடிய சிறை அல்லது அபாரதம் தண்டனையாக விதிக்கப்படலாம்.

இதில்,"அவநம்பிக்கை" என்ற வார்த்தையானது, விசுவாசமின்மை மற்றும் பகைமையின் அனைத்து உணர்வுகளையும் உள்ளடக்குகிறது.

இந்தியாவில் விடுதலை முழகத்தை எதிரொலிப்பவர்களை ஒடுக்க இந்த தேச துரோக சட்டத்தை பிரிட்டன் அரசு இயற்றியது. ஆனால், அதே பிரிட்டன் நாட்டில் இந்த சட்டம் 2009இல் நீக்கப்பட்டது. இந்தியாவில் இன்னும் தொடருகிறது

**நன்றி (பி பி சி (தமிழ்) 15 ஜுலை 21)**

---

## புதுப்புது மாநகராட்சிகளும், நகராட்சிகளும் வளர்ச்சியா..?

இந்தியாவிலேயே நகரமயமாதல் மிக அதிகமாக நடப்பது தமிழகத்தில் தான்! விவசாய நிலங்களெல்லாம் வேக,வேகமாக விழுங்கப்பட்டு புதிய மாநகராட்சிகள், நகராட்சிகள் உருவாக்கப்பட்டுக் கொண்டே உள்ளன! இதன் உள்ளார்ந்த நோக்கம் வளர்ச்சியா..? இதன் பின்னணி என்ன..? விளைவுகள் என்ன..?

"எங்க ஊரும் மாநகராட்சி ஆகிவிட்டது" என்பது மக்களில் சிலருக்கு மகிழ்வைத் தரலாம்! ஆகா, இனி பெரிய சாலை வசதிகள் செய்து தரப்படும், போக்குவரத்து வசதிகள் மேம்படும்! பெரிய,பெரிய ஷாப்பிங் மால், தியேட்டர்கள் தோன்றும், தொழிற்சாலைகள் வந்து வேலை வாய்ப்புகள் அதிகமாகும்..! என்றெல்லாம் யோசிக்க தோன்றும்.

இது மட்டுமல்ல, சிற்றூர்களின் இயல்பான வாழ்க்கை சீர்குலையும், சிறு தொழில்கள் நசிந்து காணாமலடிக்கப்படும். விளை நிலங்களெல்லாம் விலை பேசப்பட்டு கான்கிரிட் கட்டிடங்கள் எழும்பும். ஏரி, குளங்கள் எல்லாம் மண் மேடிட்டு மூடப்பட்டு, ரியல் எஸ்டேட்டில் விற்பனையாகும்! விவசாயம் கைவிடப்படும்! இயற்கை அதன் இயல்பை இழக்கும். கட்டிடங்கள் மேன்மேலும் கட்டுவதற்கு ஆற்றுமணல் அள்ளப்பட்டு 'ஸ்வாகா' ஆகும்! நகர்மயமாக்கம் அதிகமாகும் இடங்களில் எல்லாம் தண்ணீர் பிரச்சினை தலை தூக்கும்!

ஏனென்றால், தார் சாலைகளும் ,சிமெண்ட் சாலைகளும், கான்கிரீட் கட்டிடங்களும் பெய்யும் மழை நீரை நிலத்திற்குள் விடாமல் தடுத்துவிடும்!





**நம்மை நாமே அழித்துக் கொள்வதற்கு பெயர் வளர்ச்சியா..?**

இதனால் நாம் உணர வேண்டியது என்னவென்றால், ஒவ்வொரு சிறு நகரங்களும் மாநகராட்சியாய் மாற்றம் காண்பது மாபெரும் பேரழிவின் தொடக்கம்! ஒவ்வொரு பேரூராட்சியும் நகராட்சியாக மாறுவது என்பது நரகத்திற்கு நகர்வதன் தொடக்கமாகும்!

இந்தியாவிலேயே முதன்முதல் ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட முதல் முனிசிபல் கார்ப்பரேசனாக 1687ல் உருவானது மதராஸ். இதற்கு சுமார் நாற்பதாண்டுகளுக்கு பிறகு உருவாயின கல்கத்தா, மும்மை,டெல்லி போன்ற நகரங்கள்! 1941 வரை இந்தியாவில் இவை நான்கு மட்டுமே மாபெரும் நகரங்கள்!. அவ்வளவு ஏன் நமது தமிழகம் என்று எடுத்துக் கொண்டால் கூட 1970 வரை சென்னை மட்டுமே மாநகராட்சி! அதன் பிறகு மதுரை-1971 லிலும், கோவை 1981 லிலும், மாநகராட்சியாயின!

- 1994 ல் திருச்சி, சேலம், திருநெல்வேலி மாநகராட்சிகளாயின!
- 2008 ல் ஈரோடு,திருப்பூர், தூத்துகுடி,வேலூர் மாநகராட்சிகளாயின!
- 2014 ல் தஞ்சாவூர், திண்டுக்கல் மாநகராட்சிகளாயின!
- 2019 ல் நாகர்கோவில்,ஆவடி, ஓசூர் ஆகியவை மாநகராட்சிகளாயின!

தற்போதோ தாம்பரம், காஞ்சிபுரம், கும்பகோணம், கரூர், கடலூர், சிவகாசி ஆகிய நகராட்சிகள் அதனைச் சுற்றி வளர்ச்சி அடைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளை ஒன்றிணைத்து மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆக, இனி தமிழ் நாட்டில் 21 மாநகராட்சிகள் !

இந்த அறிவிப்புகளின் பின்னணியில் உலக வங்கிகள், மற்றும் நமக்கு நிதி உதவி தந்து நாட்டை கடனாளியாக்கிக் கொண்டிருக்கும் பன்னாட்டு நிதி அமைப்புகளின் அழுத்தம் உள்ளது. மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டால் அந்த காரணத்தை சொல்லி 1,500 கோடி, இரண்டாயிரம் கோடி பண உதவிகள் கிடைக்கின்றன! சாலைகள், பாலங்கள் உருவாக்குதல், குடி நீர் வசதி செய்தல், குப்பை அகற்றுதல்… என திட்டங்கள் தீட்டி இந்த பணத்தை வாங்குவதற்காக அரசுகள் நாட்டின் முகத்தையே மாற்றிக் கொண்டுள்ளன. நகரங்கள் உருவாகும் போது கூடவே வறுமையில் உழலும் சேரிகளும் சேர்ந்தே உருவாகும் என்பதே நம் அனுபவங்களாகும்!

தாம்பரம் மாநகராட்சியாக்கப்பட்டால் அதை சுற்றியுள்ள பகுதிகளான பல்லாவரம், செம்பாக்கம், பம்மல், அனகாபுத்தூர் ஆகிய நகராட்சிகள் மற்றும் அதனைச் சுற்றி அமைந்துள்ள பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் தற்போது விளை நிலங்களாக உள்ளவை எல்லாம் விலை நிலங்களாகிவிடும். இது ரியல் எஸ்டேட் என்ற தொழிலைத் தான் வளர்க்கும்.

சென்னையில் 50 ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் கூட அடையாறு, திருவான்மியூர் பகுதிகள் எல்லாமே நல்ல விவசாய பூமியாகத் தான் இருந்தது. அந்த பக்கம் கோடம்பாக்கத்தையடுத்துள்ள பகுதிகள் விவசாய நிலமாகத் தான் இருந்தது.பிறகு 'கிரேட்டர் சென்னை' என்று சொல்லி சென்னையை விரிவுபடுத்துகிறேன் என்பதாக தெற்கே சோழிங்க நல்லூர் வரையிலும், வடக்கே மணலி, அம்பத்தூர் வரையிலும், மேற்கே வளசரவாக்கம் வரையிலும் ஆக்கிரமித்துவிட்டார்கள்!

இதே போன்ற நிலை தற்போது திருச்சி, நாகர்கோவில், தஞ்சாவூர், ஓசூர் ஆகிய மாநகராட்சிகளுக்கும் விரிவாக்கம் என்ற பெயரில் ஏற்படவுள்ளது. செங்கல்பட்டு, பூவிருந்தவல்லி, மன்னார்குடி ஆகிய நகராட்சிகளும் அவற்றைச் சுற்றியுள்ள வளர்ச்சியடைந்துள்ள பேரூராட்சிகளையும், ஊராட்சிகளையும் ஒன்றிணைத்து விரிவாக்கம் செய்யப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை கண்ணுக்கு தெரியாத, கவனத்திற்கு வராத அழிவுகளை ஏற்படுத்தப் போவது சர்வ நிச்சயமாகும்!

இந்த அழிவுகள் போதாது என்று புதிய நகராட்சிகள் என்பதாக, பள்ளப்பட்டி, திட்டக்குடி, மாங்காடு, குன்றத்தூர், நந்திவரம்- கூடுவாங்ஞ்சேரி, பொன்னேரி, திருநின்றவூர், சோழிங்கர், இடங்கனசாலை, தாராமங்கலம், திருமுருகன் பூண்டி, கூடலூர், காரமடை, கருமத்தம்பட்டி, மதுக்கரை, வடலூர், கோட்டக்குப்பம், திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, அதிராம்பட்டினம், மானாமதுரை, சுரண்டை, களக்காடு, திருச்செந்தூர், கொல்லன்கோடு, முசிறி, இலால்குடி ஆகிய பேருராட்சிகள் அதன் அருகே வளர்ச்சியடைந்த ஊராட்சிகளை ஒன்றிணைத்து நகராட்சிகளாக மாற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதானது மிகப் பெரும் கவலையளிக்கிறது!

**இந்தியாவில் 1901 ல் நகரமயமாக்கம் வெறும் 11.4% மாகத்தான் இருந்தது**.

- **2001 -ல், அதாவது நூறாண்டுகள் கடந்த நிலையில் 28.5% மாகத் தான் இருந்தது.**
- **2017 ல் அது 34% மாக உயர்ந்தது. தற்போதோ 37% மாக உயர்ந்துள்ளது!**

**அதாவது இந்தியாவில் மூன்றில் ஒரு பாகம் தற்போது நகரமயமாக்கப்பட்ட நிலையில் தமிழகத்தில் மட்டும் நகரமயமாக்கம் இந்தியாவின் வேறெந்த மாநிலத்தை விடவும் அதிகமாக 53% மாக உயர்ந்துள்ளது!**

இப்படி இருக்க வேளாண் நிதி நிலை அறிக்கையில், ”தமிழகத்தின் விளை நிலப்பரப்பை இத்தனை லட்சம் ஏக்கர் கூடுதலாக்கப் போகிறோம், ஏரி,குளங்களை அழியாமல் பாதுகாத்து நிலத்தடி நீரை வளமாக்கப் போகிறோம்” என்றதெல்லாம் ஒரு போதும் சாத்தியமாகப் போவதில்லை.

காங்கிரஸ் ஆட்சியில் ஜவகர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டம் என்ற பெயரிலும், பாஜக அரசில் அடல் நகர்புற புதுப்பித்தல் திட்டம் என்ற பெயரிலும், திமுக அரசு கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரிலும் பல ஆயிரம் கோடிகள் செலவழிக்கப்பட்டு நகர்புறங்களை விரிவுபடுத்தும் திட்டம் படு வேகமாக நடந்து வருகிறது! இதன்படி 500 நகரங்களை உருவாக்கும் திட்டத்தில் இந்தியாவின் மக்கள் தொகையில் 73 சதவிகித மக்களை நகர்புற கட்டமமைப்புக்குள் கொண்டு வரும் முயற்சியின் தொடர்ச்சி தான் இந்த புதிய, புதிய மாநகராட்சிகள், நகராட்சிகள் உருவாக்கும் திட்டமாகும்! அதாவது இதன் மூலம் கிராம மக்கள் தொகையை வெறும் 27 சதவிகிதமாக்கும் முயற்சி நடக்கிறது! விவசாய நிலப்பரப்புகள் சுருங்குவதும், நகர்புற நிலப்பரப்புகள் விரிவாக்கப்பட்டுக் கொண்டே செல்வதுமான இப்படியான முயற்சிகள் வருங்காலத்தில் பெரும் உணவு பற்றாகுறையையும், வறுமையையும், வேலையில்லா திண்டாட்டத்தையுமே அதிகப்படுத்தும். இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் தான் வாழ்கிறது என்றார் மகாத்மா காந்தி. அந்த ஆன்மாவை தொலைக்கும் முயற்சிகள் தான் படு தீவிரமான நகரமயமாக்கல்!

***சாவித்திரி கண்ணன்*** (அறம் இணைய தளம் August 25, 2021)

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**

**விளம்பரக்கட்டண விவரம்**

**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**

**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

**நேர்மையாளர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்**

# மன்னிப்புக்கே இடம் இல்லை

இந்திய சுதந்திர போராட்ட காலம்

டில்லி பாரளுமன்றத்தில் வெடி குண்டு வீசியதற்காகப் புரட்சி வீரர்களான பகத் சிங், ராஜகுரு மற்றும் சுகதேவ் ஆகிய மூன்று இளைஞர்களையும் ஆங்கிலேய அரசு கைது செய்தது. டில்லி செஷன்ஸ் நீதி மன்றம் அவர்கள் மூவருக்கும் தூக்குத் தண்டனை விதித்தது.

வழக்கு நடந்து கொண்டிருந்த போது, பகத் சிங்க்கின் தாயை சந்தித்த வெள்ளை அதிகாரிகள், "ஒரு மன்னிப்பு கடிதம் எழுதிக்கொடுங்கள்; உங்கள் மகனை விட்டு விடுகிறோம்" என்றனர்.

அதற்கு பகத்சிங்கின் தாய், "என் மகனுக்கு மரண தண்டனை கிடைத்தாலும் அஞ்ச மாட்டேன்: உங்களிடம் மன்னிப்பு கேட்பது என்பது பெரும் கோழைத்தனம்" என்று சொல்லிவிட்டார்.

அவருடைய நாட்டுப்பற்றுடைய பேச்சைக் கேட்ட ஆங்கிலேய அதிகாரிகள் ஒரு கணம் ஆடிப்போய் விட்டார்கள்

**சிறு குறிப்பு**: 1931ம் ஆண்டு, மார்ச் மாதம் 23ம் தேதி, லாகூர் சிறையில் (தற்போது பாகிஸ்தான் தலை நகரம்) மாலை ஏழு மணிக்கு, பகத் சிங், ராஜகுரு மற்றும் சுகதேவ் ஆகிய மூவரும் தூக்கிலிடப்பட்டனர்.

---



# 'Citizens can't depend on govt alone for truth'

Dhananjay.Mahapatra
@timesgroup.com

**New Delhi:** Supreme Court judge Justice D Y Chandrachud on Saturday said the courts can play the role of "Truth Commissions" at a time when falsehood and fake news circulation have increased manifold with proliferation of social media, and when citizens cannot depend solely on the government for 'truth' even in a democracy.

Delivering the Justice M C Chagla Memorial Lecture, Justice Chandrachud said given the importance of truth in nation-building, many countries after independence from totalitarian regimes opt to establish "Truth Commissions" which "function to document, record and acknowledge the 'truth' of earlier regimes and violations for future generations".

> We must strive to ensure that we have a press that is free from influence of any kind, political or economic, which will provide us information in an unbiased manner... We also need to protect the integrity of our elections, and look upon voting not only as a right but also as a duty
> —SC Judge D Y Chandrachud

▶ Power of truth, P 18

வேலைக்கு அனுப்ப மறுக்கும் வடமாநில குடும்பத்தினர்

# ‘தமிழ்நாட்டுக்கு போனால் குடிச்சு பழகிடுவாங்க’

## அதிர்ச்சியடைந்த கோவை தொழில்துறையினர்

கோவை, ஆக.26: தமிழகத்திற்கு சென்றால் குடித்து பழகிவிடுவதாக கூறி மத்தியபிரதேசம், ஜார்கண்ட் மற்றும் ஒடிசா உள்ளிட்ட வடமாநில தொழிலாளர்களை தமிழகத்திற்கு அனுப்ப அவர்களது குடும்பத்தார் மறுப்பு தெரிவித்துள்ளனர். இதனால், வேலைக்கு ஆள் தேடிச்சென்ற கோவையை சேர்ந்த தொழில் துறையினர் விழிபிதுங்கி ஊர் திரும்பியுள்ளனர்.

தொழில்நகரமான கோவையில் பஞ்சாலைகள், நூற்பாலைகள், மோட்டார் மற்றும் ஆட்டோமொபைல் உதிரிபாக தயாரிப்பு நிறுவனங்கள், மற்றும் சிறு-குறு தொழில் நிறுவனங்கள் என 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இந்த தொழில்கள் கோவை மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு மட்டுமல்லாது, பிற மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களை சேர்ந்தவர்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்கி வருகின்றன.

சமீப காலமாக தமிழகத்தை சேர்ந்த இளைஞர்கள் மற்றும் பெண்கள் உற்பத்தி துறையில் வேலைக்கு செல்வதை தவிர்த்து வருகின்றனர். மாறாக சேவை அடிப்படையிலான வேலைகள் மீது நாட்டம் செலுத்தி வருகின்றனர். இதனால், தொழிற்சாலைகளில் ஹெல்பர் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வேலைகளுக்கு ஆள் கிடைப்பதில்லை. எனவே தாரர்கள் மூலமாக வெளிமாநிலங்களில் இருந்து தொழிலாளர்களை அழைத்து வந்து இங்கு பணியில் அமர்த்துகின்றனர். சில தொழில் தொழிற்சாலை அதிபர்கள் ஒன்றிணைந்து ஒரு குழுவை அமைத்து வடமாநிலங்களுக்கு சென்று தாங்களே ஆட்களை தேர்வு செய்து அழைத்து வருகின்றனர். அவ்வாறு கடந்த சில நாட்களுக்கு முன்பு கோவையை சேர்ந்த ஜவுளித் துறை தொழில் முனைவோர் வடமாநிலங்களுக்கு சென்றனர். ஆனால், தமிழகத்திற்கு தங்களது மகன்களை அனுப்ப முடியாது என்று கூறி இளைஞர்களின் பெற்றோர் அதிர்ச்சி கொடுத்துள்ளனர். மேலும், தமிழகத்திற்கு சென்றால் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி கெட்டுவிடுவதாகவும் கூறியுள்ளனர். வடமாநில குடும்பத்தினரின் இந்த பேச்சு தொழில்துறையினரை முகம் சுழிக்கவைத்துள்ளது.

இதுகுறித்து வடமாநிலங்களுக்கு ஆள் தேர்வுக்கு சென்ற தொழில் துறையினர் கூறியதாவது: தமிழகத்தில் கல்வி சதவீதம் அதிகரித்துள்ளது. இதனால், இளைஞர்கள் உற்பத்தி துறைக்கு வருவது குறைந்துள்ளது. எனவே தொழிற்சாலையின் பல்வேறு துறைகளிலும் ஆள் பற்றாக்குறை நீடிக்கிறது. இந்த பிரச்னையை தீர்க்க தொழிற்சாலைகளின் மனிதவள மேம்பாட்டு துறை ஊழியர்கள் ஒன்றிணைந்து கடந்த மாதம் மத்தியபிரதேசம், ஜார்கண்ட் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களுக்கு சென்றோம். அம்மாநிலங்களில் உள்ள சில கிராமங்களில் மது குடிக்க கூடாது என்பது கலாச்சாரமாகவும், கட்டுப்பாடாகவும் இருக்கிறது. மீறி மது குடித்தால் கடுமையான தண்டனை வழங்கப்படுகின்றன. அவ்வாறு நாங்கள் தமிழகத்தில் இருந்து வந்திருப்பதை அறிந்த இளைஞர்களின் குடும்பத்தினர், தமிழகத்திற்கு யாரையும் அனுப்ப மாட்டோம் என்று கூறினர். மேலும், தமிழகத்திற்கு சென்றால் மது குடித்து பழகிவிடுவதாகவும், போதைக்கு அடிமையாகி வாழ்க்கையை தொலைத்து விடுவதாகவும் குற்றம்சாட்டுகின்றனர். இதனால் கோவை தொழில் துறையினர் அதிர்ச்சியடைந்தனர்.



வடமாநிலங்களில் தொழிலாளி ஒருவரின் தினசரி சராசரி வருமானம் ரூ.150 முதல் ரூ.200 வரை தான் உள்ளது. ஆனால், தமிழகத்தில் ரூ.300க்கு மேல் வழங்கப்படுகிறது.

இது அல்லாமல் தங்குமிடம் இலவசமாக கொடுக்கிறோம். தமிழகத்திற்கு வரும் வடமாநில தொழிலாளர்கள் இங்கு மதுப்பழக்கத்திற்கு அடிமையாவது உண்மை தான். வார இறுதி நாட்களில் ஊதியம் வழங்கினால் அடுத்த 2 நாட்களுக்கு வேலைக்கு வருவதும் இல்லை. தமிழகத்திற்கு இப்படியொரு அவப்பெயர் வடமாநிலங்களில் உள்ளது.

இவ்வாறு தொழில்துறையினர் தெரிவித்தனர்.

### கொஞ்சம் கவனிங்க..

“டாஸ்மாக் கடைகளால் ஏற்படும் பின்விளைவுகளை தமிழக அரசு பொருட்படுத்துவதில்லை. ஏற்கனவே பல்வேறு காரணங்களால் தொழில்துறை நொடிந்துள்ளது. இந்த சூழலில், வேலைக்கு ஆட்களும் கிடைப்பதில்லை. பல்வேறு நூற்பாலைகள், இயந்திர தடவாள உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்தியை குறைத்துள்ளனர். அரசு இந்த விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டும். படிப்படியாக டாஸ்மாக் கடைகளை குறைத்து இளைஞர்கள் போதைக்கு அடிமையாவதை தடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.” என்று தொழில்துறையினர் கூறுகின்றனர்.

தினகரன் Mon, 26 August 2019
https://epaper.dinakaran.com/c/42874974

elleys' electric
sales@elleys.net www.elleys.net

தின மல
நிறுவனர் : டி.வி. ராமசுப்பையர்
■ மதுரை ■ திங்கள் ஆகஸ்ட் 16 2021
சென்னை, வேலூர், புதுச்சேரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்

# ‘பார்லி., செல்வோம்’

- சட்டங்கள் இயற்றுவது எதற்காக என தெரிந்து கொள்வோம்
- பணத்திற்காக இல்லாமல் மக்களுக்காக பணியாற்றுவோம்
- விவாதம் இன்றி மசோதாக்கள் நிறைவேறுவது வருத்தமே
- சபைகளின் பழைய மாண்பு குறித்து வக்கீல்களிடம் மனம் திறப்பு
- சுதந்திர தின விழாவில் சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி பேச்சு

புதுடில்லி, ஆக. 16–

‘‘பார்லிமென்டில் சட்ட மசோதாக்கள் விவாதங்கள் இன்றி நிறைவேற்றப்படுவது வருத்தம் அளிக்கிறது. எதற்காக சட்டம் இயற்றப்படுகிறது என்பது யாருக்கும் தெரிவது இல்லை. முன்பெல்லாம் இதற்காக பார்லி.யில் நீண்ட விவாதம் நடக்கும்.

‘‘எனவே சட்டம் எதற்காக இயற்றப்படுகிறது என்பதை தெரிந்து கொள்ள நீதித்துறையைச் சேர்ந்தவர்கள் பார்லிக்கு உறுப்பினர்களாக செல்ல வேண்டும்’’ என டில்லியில் நடந்த சுதந்திர தின விழாவில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா பேசினார். இந்த நிகழ்ச்சியில் சபைகளின் பழைய மாண்பு குறித்து அவர் மனம் திறந்து பேசினார்.

பார்லி. மழைக்கால கூட்ட தொடர் திட்டமிட்டதை விட முன்னதாகவே முடிவுக்கு வந்தது. ‘பெகாசஸ்’ உளவு விவகாரம் புதிய வேளாண் சட்டங்கள் அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்வு உட்பட பல்வேறு விவகாரங்களை முன்வைத்து எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டன.

இந்த அமளிகளுக்கு இடையே பல்வேறு மசோதாக்கள் விவாதம் இன்றி நிறைவேற்றப்பட்டன. பார்லி.யில் விவாதம் இன்றி மசோதாக்கள் நிறைவேற்றப்படுவதற்கு பல்வேறு எதிர்க்கட்சியினரும் அதிருப்தி தெரிவித்தனர்.



என்.வி.ரமணா

இந்நிலையில் நாட்டின் 75வது சுதந்திர தின விழாவையொட்டி உச்ச நீதிமன்றத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த நிகழ்ச்சியில் தலைமை நீதிபதி ரமணா பங்கேற்று மூவர்ண கொடியை ஏற்றினார்.

இதில் நீதிபதிகள் ஏ.எம்.கன்வில்கர், வி.ராம சுப்ரமணியன், சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா உட்பட நீதிபதிகள் வழக்கறிஞர்கள் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் தலைமை நீதிபதி என்.வி.ரமணா பேசியதாவது:

நம் நாட்டின் நீண்ட நெடிய சுதந்திர போராட்டத்திற்கு நீதித்துறையைச் சேர்ந்த பலர் தலைமை வகித்துள்ளனர். மகாத்மா காந்தி, பாபு ராஜேந்திர பிரசாத் போன்றோர் வழக்கறிஞர்களாக இருந்தவர்கள்.

தங்கள் சொத்துக்கள் குடும்பம் மற்றும் வாழ்க்கையை அர்ப் பணித்து சுதந்திர போராட்டத்தை வழி நடத்தினர்.

லோக்சபா மற்றும் ராஜ்யசபாவின் முதல் உறுப்பினர்களில் பெரும்பாலானோர் வழக்கறிஞர்களாகவும் நீதித்துறையை சேர்ந்தவர்களாகவுமே இருந்தனர். அப்போதெல்லாம் சட்ட மசோதாக்கள்

தொடர்ச்சி 5ம் பக்கம்

## கொரோனா 3ம் அலையை கணிக்க முடியாது

‘எய்ம்ஸ்’ இயக்குனர் தகவல்

புதுடில்லி, ஆக. 16–

‘‘நம் நாட்டில் கொரோனா வைரசின் மூன்றாம் அலை ஏற்படுமா, இல்லையா என்பதை இப்போதைக்கு கணிக்க முடியாது,’’ என, ‘எய்ம்ஸ்’ இயக்குனர் ரந்தீப் குலேரியா தெரிவித்துள்ளார்.

...களுக்கு கொரோனா தடுப்பூசி இதுவரை செலுத்தப்படாமல் உள்ளது. எனவே அவர்களுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

சமீபத்தில் நடத்திய ஆய்வில், 50 சதவீதத்திற்கும் அதிகமான குழந்தைகள் கொரோனா

AMET
ACADEMY OF MARITIME EDUCATION AND TRAINING
Deemed to be University Under Section 3 of UGC Act 1956
ADMISSION OPEN 2021-2022
Assured Covid Scholarship
B.E.
B.Tech.
➢ Naval Architecture and Offshore Engineering
➢ Petroleum Engineering
➢ Food Processing Technology

இலஞ்சம் தவிர்! Date of Publication: 5th of Every Month நெஞ்சம் நிமிர்!!

**நேர்மை நெறி- செப்டம்பர்-2021**

| | |
|---|---|
| Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419 | SSB/Chennai City North Divn Regn.No.TN/CCN/671/2018-20 |

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP 533/2018-20




# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் **திங்களிதழ்**

**ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்**

**வெளியீட்டுச்செயலாளர்: ஜி கோவிந்தசாமி:**

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 Sept 2021
Due to corona published online)

**வாழ்தல் வேண்டிப்**
**பொய் கூறேன்: மெய் கூறுவல்!**

*பெறுநர்*

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,**

AYANAVARAM, CHENNAI-23

Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155, “Nambakam” Konnur High Road, Ayanavaram, and Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan

இலஞ்சம் கொடுக்காதீர் இலஞ்சம் கொடுக்க விடாதீர்!!